இனிமையான குழந்தைகளே! மாயாவின் நோயிலிருந்து விடுபட தினந்தோறும்

கேள்வி: கர்மாதீத் நிலையை அடைவதற்கான முயற்சி என்ன?

பதில்: புத்தியில் பாபாவைத் தவிர வேறு எந்த நினைவும் இல்லாமல் இருக்கும் படி பயிற்சி செய்யுங்கள். கடைசி நினைவுக்கு ஏற்ப நிலை..... எப்போது இந்த நிலையை அடைகிறோமோ அப்போது புத்தியில் வேறு எந்த நினைவும் இருக்காது. சதா மகிழ்ச்சியாக இருப்பார்கள். மேலும் கர்மாதீத் நிலையை அடைவார்கள். உங்களுடைய முயற்சியே ஆத்ம உணர்வுடையவர் ஆவதாகும். ஆத்மா, ஆத்மாவை பாருங்கள், ஆத்மாவிடம் பேசினால் மகிழ்ச்சி உண்டாகிக் கொண்டே இருக்கும். நிலையும் உறுதியாகி விடும்.

பாடல்: தாயும் நீயே.....

ஓம் சாந்தி. பாடல் யதார்த்தமானது. முழு சிருஷ்டியையும் படைக்கக் கூடியவர் மற்றும் யார் மூலமாக படைக்கிறாரோ அவரைத்தான் தாயும் தந்தையும் என கூறப்படுகிறது. படைப்பவர் என்று எந்த ஒரு சாகாரத்திலும் ஆகாரத்திலும் இருப்பவருக்குக் கூற முடியாது. படைக்கக் கூடியவர் என்று ஒரு நிராகாரருக்குத் தான் கூறப் படுகிறது. இப்போது இதை குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துக் கொள்கிறீர்கள். அவர்கள் பாடிக் கொண்டே மட்டும் இருக்கிறார்கள். பக்தர்களின் புத்தியில் இது மட்டுமே இருக்கிறது. பக்தி செய்ய வேண்டும். ஆனால் யாருடைய பக்தி செய்ய வேண்டும் என்பது தெரியவில்லை. யாரை தாய் தந்தை என்று கூறுகிறோமோ அந்த ஒரு பகவானின் பக்தியை செய்ய வேண்டும். ஆயிரக்கணக்கானவர்களை கிடையாது. பகவான் வந்து பக்தர்களுக்கு பக்தியின் பலனைக் கொடுப்பார் என்கிறார்கள். பலன் என்றாலும் ஆஸ்தி என்றாலும் ஒன்று தான். பிள்ளை பிறக்கிறது என்றால் தாய் தந்தையின் ஆஸ்தியின் பலன் கிடைக்கிறது. மற்றபடி இந்த பாடல் பக்தி மார்க்கத்தில் இருக்கிறது. எங்களுக்கு வந்து பக்தியின் பலனை கொடுங்கள் என நினைக்கிறார்கள். ஞானம் மற்றும் பக்தி என கூறுகிறார்கள். பக்தியின் பலன் ஞானம் ஆகும். உண்மையில் பக்தி எப்போதிலிருந்து ஆரம்பமாகியது என்று இப்போது நீங்கள் அறிகிறீர்கள். ஞானத்தின் நேரத்தில் பகலும், பக்தி உள்ள போது இரவாக இருக்கிறது என்பது யாருக்கும் தெரியவில்லை. இரவும் பகலும் நிச்சயமாக பாதிபாதியாக இருக்கும். சாஸ்திரங்களில் கல்பத்தின் ஆயுளை நீண்டதாக எழுதி விட்டனர். ஞானத்திற்கு நீண்ட காலம் கொடுத்து விட்டனர். பக்திக்கு சிறிது காலம் கொடுத்து விட்டனர். துவாபர் கலியுகத்தின் ஆயுள் குறைவாக காட்டப்பட்டு இருக்கிறது. இந்த இரவு மற்றும் பகலின் முழு கணக்கு இல்லை. கிருஷ்ண பட்சம் மற்றும் சுக்லபட்சம் என்று கூட கூறுகிறார்கள். சாஸ்திரங்களில் இந்த வார்த்தைகள் இருக்கின்றது. நீங்கள் சாஸ்திரங்களை ஏற்பதில்லை. பிறகு சாஸ்திரங்களின் வார்த்தைகளை ஏன் எடுக்கிறீர்கள் என கூறுகிறார்கள். சாஸ்திரங்களின் சாரத்தை பாபா தான் தெரிவிக்கின்றார் என்று நீங்கள் புரிய வைக்க வேண்டும். இந்த சாஸ்திரத்தில் இது சரியில்லை இது சரி என குறிப்பு நிச்சயம் கொடுக்க வேண்டியிருக்கிறது. எப்படி படக் கண்காட்சியில் அனுமான், கணேஷ், வாமன அவதாரம்..... போன்ற படங்களை எல்லாம் காண்பிக்க வேண்டும் அல்லவா? எந்த விஷயம் தவறோ அதை விளக்கி பிறகு

எது சரி என்பதை புரிய வைக்கின்றார்.

சிவாய நமஹ என பாபாவின் மகிமையை இப்போது பாடுகிறார்கள். பிறகு தாயும் நீயே, தந்தையும் நீயே..... என எழுதப்பட்டிருக்கிறது. பெயர் கொடுக்க வேண்டும் அல்லவா? நம்முடைய தந்தை யார் என்று மனிதர்களுக்குத் தெரியவில்லை. ஓ, கடவுளே என்று கூறுகிறார்கள். புத்தி அங்கே போகிறது. மனிதர்கள் பிரார்த்தனை போன்றவைகளை செய்கின்றார்கள் என்றால் பரம்பிதா பரமாத்மா பரலோகத்தில் வசிக்கின்றார் என அறிகிறார்கள். பிரம்மா, விஷ்ணு, சங்கரரை நினைத்தால் புத்தி சூட்சும வதனத்திற்குப் போகும். முதல், இரண்டாம், மூன்றாம் தளம் இருக்கிறது. இப்போது முக்கியமான விஷயம் பாபாவை மறந்து இருக்கிறார்கள். பாபா வந்து புகார் செய்கின்றார். நீங்கள் என்னை எவ்வளவு நிந்தித்து விட்டீர்கள். பாபா அனைவருக்கும் சத்கதி அளிக்கக் கூடியவர். அவரை அனைவரும் நிந்தித்து இருக்கிறார்கள். யதாயதாஹி..... என்பது பகவான் வாக்கு ஆகும். பாரதவாசிகள் தனது தர்மத்தை நிந்தித்து இருக்கின்றனர். ஈஸ்வரன் சர்வவியாபி என்கிறார்கள். அனைவருக் குள்ளும் ஈஸ்வரன் இருக்கிறாரா என கேட்டால் ஆமை அவதாரம், மீன் அவதாரம், வராக அவதாரம்..... எடுப்பதாகக் கூறிவிடுகிறார்கள். பாபா பாரதவாசி குழந்தைகளுக்குத் தான் கூறுகின்றார். ஏனென்றால் குழந்தைகள் தான் நிந்தனை செய்கிறார்கள். இந்த செல்லமான குழந்தை(பிரம்மா) கூட நிந்தனை செய்திருக்கிறார். இந்த நிந்தனையும் நாடகத்தில் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது. அப்போது தான் பாவ ஆத்மா ஆகிறார்கள். பாபா அனை வரையும் தூய்மையாக மாற்றினார். ஏனென்றால் பதீத பாவனர் ஆவார். தூய்மையாக மாற்றி உலகத்திற்கு அதிபதியாக மாற்றுகிறார். இப்படி மாற்றக் கூடிய தந்தையை எவ்வளவு திட்டியிருக்கிறார்கள். புரிய வைக்கும் போது ஏற்றுக் கொள்கிறார்கள். செய்திகள் வருகிறது. இத்தனை பேர் கையெழுத்திட்டனர் என்றால் உண்மையில் தங்களின் விஷயம் சரியாகும். ஸ்ரீமத் பகவத் கீதை என்றால் பகவானுடையது. உயர்ந்ததிலும் உயர்ந்த வழி,..... உயர்ந்தவரிலும் உயர்ந்தவரின் வழியும் உயர்ந்ததாக இருக்கும் அல்லவா என இப்போது கூறுகிறார். அவர் வந்து பதீதமான கீழானவர்களையும் உயர்ந்தவர்களாக மாற்றுகிறார். எனவே முதன் முதலில் ஒருவரின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. குழந்தைகளாகிய உங்களுக்குள்ளும் வரிசைக் கிரமம் இருக்கின்றது. நிறைய குழந்தைகள் பாபா, என்ன செய்வது, மாயாவின் புயல் எங்களை இருக்க விடுவதில்லை, இந்த இந்த விகாரங்கள் எங்களைத் துன்புறுத்துகிறது என்று எழுது கிறார்கள். நீங்கள் இதன் மீது வெற்றி அடைய வேண்டும் என பாபா கூறுகின்றார். இல்லை என்றால் பதவி கீழானதாகி விடும். ஆசிரியரே இவ்வாறு ஏதாவது வேலையைச் செய்தால் நிச்சயமாக, மற்றவர்களுக்கு இவரது நடத்தை இப்படி இருக்கிறது, இவர் மற்றவர்களுக்கு இவ்வாறு புரிய வைக்கின்றார் என்ற சந்தேகம் வருகின்றது. விகாரமும் பாதியாக இருக்கிறது. சதோ, ரஜோ, தமோ என்பது ஒவ்வொரு விஷயத்திலும் இருக்கிறது. சத்யுகத்திற்கு சதோ-உயர்ந்தது என கூறப் படுகிறது, கலியுகத்திற்கு தமோ-கீழானது என கூறப்படுகிறது. உலகம் கீழானது. ஆனால் தன்னை யாரும் கீழானவர் என புரிந்துக் கொள்வதில்லை. இந்த இராவண இராஜ்யத்தில் ஒருவர் கூட உயர்ந்தவர் இல்லை என பாபா புரிய வைக்கிறார். உயர்ந்தவரிலும் உயர்ந்தவர் யார் என யாரையாவது கேட்கிறோம் என வைத்துக் கொள்ளுங்கள், பகவான் என கூறுவார்கள். அவருடைய தொழிலைப் பற்றி அறிகிறீர்களா என்றால், இல்லை அல்லது சன்னியாசிகள்

தான் உயர்ந்தவர்கள், ஏனென்றால், தூய்மையாக இருக்கிறார்கள் என கூறுவார்கள். தானும் சன்னியாசிகளைப் பின்பற்று கிறார்கள். நமஸ்காரம் செய்கிறார்கள் என்றால், அவர்களிடம் சன்னியாசிகளை விட நிச்சயம் யாராவது உயர்ந்தவர்கள் இருப்பார்கள் என கேட்க வேண்டும். சன்னியாசி கூட பகவானை அடைய சாதனை செய்கிறார். தற்காலத்தில் நிறைய சித்திரங்களை உருவாக்குகிறார்கள். எல்லோரையும் விட உயர்ந்தவராக பரமாத்ôவை வைக்கிறார்கள். இப்போது இராமர் அல்லது கிருஷ்ணருக்கு முன்பு சிவலிங்கத்தை வைக்கிறார்கள். இதிலிருந்து கூட பெரியவர் என்று தெரிகிறது. இல்லையென்றால் அவர்கள் யாரும் சிவனின் பூஜையை செய்ய மாட்டார்கள். அவர்களே இராஜ்யம் செய்கிறார்கள். எப்போது பதீதமாகி விடுகிறார்களோ அப்போது பூஜை செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். உயர்ந்ததிலும் உயர்ந்த நிராகார் பரமாத்மாவிற்கு தான் பதீத பாவனர் அனைவருக்கும் சத்கதி வழங்கும் வள்ளல், அனைவரையும் விடுவிப்பவர் என கூறப்படுகிறது. தன்னுடன் அனைவரையும் அழைத்துச் செல்வார். அவர் நம்முடைய தந்தை என நீங்கள் அறிகிறீர்கள். நாம் அனைவரும் இச்சமயம் நோயுற்று இருக்கிறோம். ஞானத்தினால் சதா ஆரோக்கியமாகவும், சதா செல்வந்தராகவும் மாறுகின்றோம். தினந்தோறும் ஒரு ஆப்பிளை சாப்பிட்டால் சதா ஆரோக்கியமாக மாறலாம் என கூறுகிறார்கள். இதை நீங்கள் நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். மாயா அனைவரையும் நோயாளி ஆக்கி விட்டது. இப்போது அனைவரையும் ஆரோக்கிய மானவராகவும், செல்வந்தராகவும் மாற்றக் கூடியவர் ஒரு தந்தை தான். சூட்சும வதனத்தில் கூட ஆத்மாக்கள் ஆரோக்கியமாக உள்ளன. இங்கே ஆரோக்கியமற்ற ஆத்மாக்களாக உள்ளன. பிறகு மூல வதனத்திலிருந்து முதலில் ஆத்மாக்கள் வரும் போது சுகத்தைத் தான் பார்க்கும். எனவே பாபா பிரம்மா மூலமாக நமக்கு நிறைய சுகத்தை அளிக்கிறார். இப்போது வினாசம் நடக்கத்தான் வேண்டும். இந்த வேள்வியிலிருந்து வினாச ஜுவாலை வெளிவருகிறது. அவர்கள் அமைதியை எப்படி உருவாக்குவது என்று ஆலோசனை செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மனிதன் விரும்புவது ஒன்று.... என்று பாடப்பட்டிருக்கிறது. வினாசம் நடக்கும் போது தான் அமைதியும் ஏற்படும். பிறகு அனைத்து ஆத்மாக்களும் முக்தி தாமத்திற்குச் சென்று விடும். வினாசத்தைத் தவிர வேறு எந்த உபாயமும் கிடையாது. இதையும் அவர்களுக்கு யார் கூறுவது? இந்த பீஷ்ம பிதாமகர் போன்றவர்களுக்கும் கடைசியில் ஞானம் கிடைக்கிறது.

மனிதர்கள் அமைதிக்காக தங்களுக்குள் சேர்ந்து ஒன்றாக வேண்டும் என வழிகளைத் தேடுகிறார்கள். ஆனால் அவ்வாறு நடக்காது. முன்பு கூட வினாசம் நடந்தது. யாதவர் மற்றும் கௌரவர்களும் இருந்தனர். கீதையின் பகவானும் வந்தார். இப்போது பதீத உலகமாக இருக்கிறது. இதில் உயர்ந்தவர் யாரும் கிடையாது. அனைவரையும் விட உயர்ந்தவர்கள் லஷ்மி, நாராயணன் ஆவார்கள். இவரே சத்யுகத்தில் ஆட்சி செய்தார். இப்போது கீழானவர்களின் விருத்தி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே நிச்சயம் வினாசம் நடக்க வேண்டும். வினாசத்திற்குப் பிறகு அனைவரும் சுகம் சாந்தியைப் பெறலாம். நாம் ஆதி சனாதன தேவி தேவதா தர்மத்தைச் சார்ந்தவர்கள் என்பதை அனைவருக்கும் புரிய வைக்க வேண்டும். முன்பு அதே தர்மம் இருந்தது. இப்போது இல்லை. மீண்டும் அதனுடைய ஸ்தாபனை நடந்துக் கொண்டிருக்கிறது. இச்சமயம் நாம் பிராமணர்கள் தேவதை கிடையாது.

யாராவது சொற்பொழிவாற்ற மேடைக்கு வருகின்ற போது ஏதாவது சிந்தனை செய்து விசாரம் செய்து இதைக் கூற வேண்டும் என்று வருவார்கள். நம்முடைய குழந்தைகளோ என்ன பேசுவது என நினைக்கிறார்கள். அமைதியை நிறுவக் கூடியவர், அவர் ஒரே ஒருவர் அனைவருக்கும் சத்கதியை வழங்கக் கூடிய வள்ளல் பாபா ஆவார், அவரே விடுவிக்கக் கூடியவர், அனைவரையும் திரும்ப அழைத்துச் செல்லக் கூடிய நேரம் இதுவே ஆகும்.

குழந்தைகளே, நீங்கள் சத்யுகத்திற்குச் செல்ல தகுதி உடையவர் என நினைக்கிறீர்களா என பாபா கேட்கிறார். இராவணனை வெற்றி அடைந்திருக்கிறீர்களா? பாபா வெற்றி அடைவதற்காக முயற்சி செய்துக் கொண்டிருக்கின்றோம் என்கின்றார்கள். அனைவரும் கையைத் தூக்குகிறார்கள். ஏனென்றால், வெட்கம் வருகிறது அல்லவா? எவ்வளவு நேரம் பாபாவை நினைவு செய்கின்றோம் என தன் முகத்தை பாருங்கள் என பாபா கூறுகின்றார். கடைசியில் யாரும் நினைவிற்கு வரக் கூடாது. இந்த நிலையை அடைய வேண்டும். அப்போது தான் கடைசி நினைவிற்கு ஏற்ப நிலை கிடைக்கும். கர்மாதீத நிலையின் அருகில் போக முடியும். மற்றவர்களுக்கு சேவை செய்யும் போது தான் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க முடியும். உங்களைத் தவிர ஆத்மாவிற்கு வேறு யாரும் இன்ஜக்ஷன் போட முடியாது. ஞான மையை சத்குரு கொடுத்தார்..... சத்குரு என பாடப் பட்டிருக்கிறது. சிருஷ்டியின் முதல், இடை, இறுதியின் ஞானம் கிடைத்து விட்டது என்று ஆத்மா விற்கு இப்போது தெரிந்திருக் கிறது. இந்த ஆத்மா சரீரத்தின் மூலமாக ஞானக் கடலுக்குக் கூறியது. இப்போது நாம் திரும்பிப் போக வேண்டும். இது மகிழச்சிக்குரிய விஷயம் ஆகும். பழைய உடலை விட்டு விட்டு புதிய உடலை எடுக்க வேண்டும். இதனால் தான் சியாம் சுந்தர் என்ற பெயர் இருக்கிறது.

நாம் அழகாக இருந்தோம், இப்போது கருப்பாகி விட்டோம். மீண்டும் அழகாக மாறுவோம் என நீங்கள் அறிகிறீர்கள். பாபா அழகாக மாற்றுகிறார், மாயை இராவணன் கருப்பாக மாற்றுகிறான். காமச் சிதையில் அமர்வதால் கருப்பாகிப் போகிறார்கள். இது மிகவும் புரிந்துக் கொள்ள வேண்டிய வி'யமாகும். மாணவர்களின் புத்தியில் ஞானம் வரிசைக் கிரமத்தில் தாரணை ஆகிறது. சிலர் மிகவும் மந்தமாக இருக்கிறார்கள். படிக்கக் கூடிவர்கள் மிகவும் டல்லாக இருக்கிறார்கள் என டீச்சர் கூறுகிறார். தேக உணர்வு நிறைய இருக்கிறது. ஆத்ம உணர்வு டையவராக இருந்தால் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆத்மா ஆத்மாவைப் பார்த்து, அதாவது தனது சகோதரனைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்துக் கொண்டே இருக்க வேண்டும். தந்தை குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார்.

குழந்தைகளே! உங்களை மாயாவிடமிருந்து விடுவித்து திரும்ப அழைத்துச் செல்வதற்காக நான் வந்திருக்கிறேன் என பாபா கூறுகிறார். இந்த உடலில் சிவபாபாவின் பிரவேசம் ஏற்படுகிறது. அவரும் நிச்சயமாக புருவ மத்தியில் தான் வருவார். அப்படியே மேலிருந்து கங்கை ஓடாது. சிவன் காளை மாட்டின் மீது சவாரி செய்ததாக காண்பிக்கிறார்கள். காளை மாட்டின் புருவ மத்தியில் சிவனின் சித்திரத்தைக் காண்பிக்கிறார்கள். ஆத்மா நிச்சயமாக புருவ மத்தியில் தான் இருக்கும். ஆத்மாவின் இடம் எதுவோ நிச்சயமாக அங்கே தான் அமரும். குருமார்கள் தங்களின் சீடர்களை அருகாமையில் உட்கார வைக்கிறார்கள். அந்த

சத்குருவும் வந்து அருகில் அமர்கின்றார். குரு பிரம்மா என்கிறார்கள். விஷ்ணுவையோ அல்லது சங்கரரையோ குரு என கூற மாட்டார்கள். அதே பிரம்மா பிறகு விஷ்ணுவின் இரட்டை ரூபமாக மாறுகின்றார். குரு என்று சிவனுக்குக் கூறலாம். ஏனென்றால், அனைவருக்கும் சத்கதி அளிக்கின்றார். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான் ஆவார். எவ்வளவு நன்றாகப் புரிய வைக்கப்படுகிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு ஆத்ம உணர்வுடையவராக மாற வேண்டும். நாம் ஆத்மா சகோதர சகோதரன், இந்த பார்வை உறுதி ஆக வேண்டும்.

2. ஆன்மீக சமூக சேவகராகி ஆத்மாக்களுக்கு ஞான ஊசி போட வேண்டும். அனைவருக்கும் ஆன்மீக சேவை செய்ய வேண்டும்.

வரதானம் : திருப்தியின் ஆதாரத்தில் ஆசிர்வாதம் கொடுக்கக் கூடிய மற்றும் அடையக் கூடிய எளிய முயற்சியாளர் ஆகுக.

யார் சுயம் திருப்தியாக இருந்து அனைவரையும் திருப்திப்படுத்துகின்றார்களோ அவர்களுக்குத் தான் அனைவரின் ஆசிர்வாதங்களும் கிடைக்கும். ஒருவேளை அனைத்து குணங்களையும் தாரணை செய்வதில் அல்லது அனைத்து சக்திகளையும் கட்டுப்படுத்துவதில் உழைப்பு தேவைப் படுகிறது எனில் அதை விட்டு விடுங்கள். அமிர்தவேளையிலிருந்து இரவு வரை ஆசிர்வாதம் கொடுக்கும் மற்றும் ஆசிர்வாதம் அடையக் கூடிய ஒரே ஒரு காரியம் மட்டும் செய்யுங்கள். இதில் அனைத்தும் வந்து விடுகிறது. ஒருவர் துக்கம் கொடுத்தாலும் நீங்கள் ஆசிர்வாதம் கொடுக்கும் போது எளிய முயற்சியாளர்களாக ஆகிவிடுவீர்கள்.

சுலோகன்: யார் சமர்ப்பண மனநிலையில் இருக்கிறார்களோ,

அவர்கள் முன் அனைவரின் சகயோகம் தானாகவே சமர்ப்பணம் ஆகிவிடும்.

மாதேஸ்வரியின் விலைமதிப்பற்ற மகாவாக்கியம்

மனித ஆத்மா தனது முழு வருமானத்தின் ஆதாரத்தில் எதிர்கால பிராப்தியை அனுபவிக்கின்றது

எனது பழைய பிறவியின் நல்ல வருமானத்தினால் தான் இப்பொழுது எனக்கு இந்த ஞானம் பலனாக கிடைத்திருக்கிறது என்று பல மனிதர்கள் நினைக்கின்றனர். ஆனால் அவ்வாறு கிடையாது. பழைய பிறவிக்கான நல்ல பலன் என்பதை நாம் அறிவோம். கல்பத்தின் சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கிறது. சதோ, ரஜோ, தமோ என்று மாறிக் கொண்டே இருக்கிறது. ஆனால்

நாடகப்படி முயற்சியின் மூலம் பிராப்தி என்று கூறப்பட்டிருக்கிறது. அதனால் தான் அங்கு சத்யுகத்தில சிலர் இராஜா இராணியாக, சிலர் வேலைக்காரர்களாக, சிலர் பிரஜா பதவி அடை கின்றனர். ஆக இது தான் முயற்சியின் நிரூபணம் ஆகும். அங்கு பிரிவினைகள், பொறாமை இருக்காது. அங்கு பிரஜைகளும் சுகமாக இருப்பார்கள். தாய் தந்தை தங்களது குழந்தைகளை வளர்ப்பது போன்று இராஜா இராணி பிரஜைகளை கவனிப்பார்கள். அங்கு ஏழை, பணக்காரன் அனைவரும் திருப்தியாக இருப்பார்கள். இந்த ஒரு பிறவியின் முயற்சியின் மூலம் 21 பிறவிகளுக்கு சுகம் அனுபவிப்பார்கள். இது அழிவற்ற வருமானமாகும். அந்த அழிவற்ற வருமானம் அழிவற்ற ஞானத்தின் மூலம் அழிவற்ற பதவியை ஏற்படுத்துகின்றது. நாம் இப்பொழுது சத்யுக உலகிற்கு சென்று கொண்டிருக்கின்றோம். இந்த நடைமுறை விளையாட்டு இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கு வேறு எந்த மாய மந்திரத்திற்கான விசயம் கிடையாது. நல்லது ஓம்சாந்தி.